தமிழ்நாடு அரசு

# மேல்நிலை

## முதலாம் ஆண்டு

# பொதுத் தமிழ்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2018*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

# முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் மாணவர்களின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

# நாட்டுப்பண்

*ஜன கண மன அதிநாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா*
*திராவிட உத்கல பங்கா*
*விந்திய ஹிமாசல யமுனா கங்கா*
*உச்சல ஜலதி தரங்கா.*
*தவ சுப நாமே ஜாகே*
*தவ சுப ஆசிஸ மாகே*
*காஹே தவ ஜய காதா*
*ஜன கண மங்கள தாயக ஜய ஹே*
*பாரத பாக்ய விதாதா*
*ஜய ஹே ஜய ஹே ஜய ஹே*
*ஜய ஜய ஜய ஜய ஹே!*

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

---

## நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு


வெற்றி! வெற்றி! வெற்றி!



# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



## தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

## தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

**உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை இன்றைய இளம்தலைமுறைக்கு அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.**

ஆளுமை மிக்க **ஆசிரியர்களுக்கும்** ஆற்றல் நிறை **மாணவர்களுக்கும்...**

பொருண்மைக்கு ஏற்ப இயலின் தொடக்கத்தில் கற்றல் நோக்கங்கள்

ஒவ்வொரு இயலையும் ஆர்வத்துடன் அணுக உரைநடை உலகம், கவிதைப்பேழை, விரிவானம், இனிக்கும் இலக்கணம் ஆகிய தலைப்புகளாக . . . . .

பாடப்பகுதிகளின் கருத்தை விளக்க அரிய, புதிய செய்திகளை அறிந்து கொள்ள தெரிந்து தெளிவோம் தெரியுமா? . . . .

காலத்தின் பாய்ச்சலுக்கு ஈடுகொடுப்பதாக இணையவழி உரலிகள் . . .

பாடப்பகுதிகளின் தொழில் நுட்பக் கருத்தை விளக்க திட்பமும் நுட்பமும். . . .

படிப்பின் அகலமும் ஆழமும் தொடர அறிவை விரிவு செய் . . .

பயின்ற பாடங்கள் குறித்துச் சிந்திக்க, கற்றல் செயல்பாடுகளாக கற்பவை கற்றபின் . . . .

இயலின் இறுதியில் விழுமியப் பக்கமாக நிற்க அதற்குத் தக. . .

உயர்சிந்தனைத் திறன்பெற, படைப்பாக்கத்தின்வழி வாழ்வைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க, மொழியோடு விளையாடு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து நுட்பங்களை உள்வாங்கி மொழியை ஆற்றலுடன் பயன்படுத்த மொழியை ஆள்வோம் . . . .

மாணவர்தம் அடைவை அளவிட நம்மை அளப்போம் . . . .

பாடநூலில் உள்ள விரைவுக் குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore/ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில, கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

# பணிவாய்ப்புத் தமிழ்

## வேலைவாய்ப்பு

- தமிழக அரசுப்பணியில் தமிழ்வழிக் கற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. (Persons Studied in Tamil Medium Act -2010)
- இந்திய ஆட்சிப் பணி (IAS) முதன்மைத் தேர்வில் கட்டாய இந்திய மொழித்தாள் வரிசையில் தமிழ் மொழித்தாள் இடம்பெற்றுள்ளது. கட்டாய மொழித்தாளில் குறைந்தபட்ச மதிப்பெண் பெற்றால் மட்டுமே ஐஏஎஸ் தேர்வரின் பிற தாள்கள் மதிப்பிடப்படும்.
- தமிழ்ப் பட்டதாரிகளும் பிற பட்டதாரிகளும் இந்திய ஆட்சிப்பணிக்கான முதன்மைத் தேர்வில் அனைத்துத் தாள்களையும் (கட்டாய ஆங்கில மொழித்தாள் நீங்கலாக) தமிழிலேயே எழுதி வெற்றி பெற முடியும். ஆளுமைத் தேர்விலும் தமிழிலேயே பதிலளிக்கலாம்.
- துணை ஆட்சியர் பதவிக்கான தொகுதி -1 தேர்வில் 300 மதிப்பெண் கொண்ட இரண்டாம் தாளில் 90 மதிப்பெண் வினாக்கள் 'தமிழ் மொழி மற்றும் பண்பாடு' என்ற பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன.
- ஆசிரியர் பணிக்கான TET, CTET மற்றும் TRB தேர்வுகளில் தமிழுக்கும் தமிழ் பட்டதாரிகளுக்கும் வாய்ப்புள்ளது.
- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி IV (கிராம நிர்வாக அலுவலர் - விஏஓ, இளநிலை உதவியாளர் போன்ற பணிகள்) தொகுதி II A மற்றும் II (தலைமைச் செயலக உதவிப்பிரிவு அலுவலர், சார் பதிவாளர், வருவாய் உதவியாளர் உள்ளிட்ட பல சார்நிலைப் பணிகள்) எழுத்துத் தேர்வுக்கான 300 மதிப்பெண்களில் செம்பாதி (50%) மதிப்பெண்ணுக்கான கேள்விகள் (150 மதிப்பெண்கள்) பொதுத்தமிழ் பாடத்திலிருந்து கேட்கப்படுகின்றன. இந்தப் பாடத்திற்கு 6 முதல் 10-ஆம் வகுப்பு வரையிலான பாடப்புத்தகங்களே அடிப்படை.
- மொழிபெயர்ப்புத்துறையிலும் படைப்புத் துறையிலும் ஆர்வத்துடன் தமிழ் பயின்ற தகுதி மிக்கவர்களுக்குப் பணிவாய்ப்புகள் உள்ளன.
- மொழிநடை திருத்துநர் (Copy Editor), கலைச்சொல் வல்லுநர், திரைத்துறையில் துணைத்தலைப்புகள், வசனங்கள் (Sub Title) எழுதுபவர் போன்ற பணிவாய்ப்புகளைத் தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிப்புலமை பெற்றவர்கள் பெறமுடியும்.
- நல்ல உச்சரிப்புத் திறன் கொண்டவர்கள் வானொலி மற்றும் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகலாம்.
- புத்தக வடிவமைப்பும் தமிழ், ஆங்கிலத் தட்டச்சும் கற்றவர்களுக்குப் பதிப்புத்துறையில் அதிக பணிவாய்ப்புகள் உள்ளன.
- தமிழ்க் கணினியம் (Tamil Computing) - கலைச்சொல் உருவாக்கம், இணையத்திலும் இணையக் கலைக்களஞ்சியங்களிலும் கட்டுரை எழுதுதல், பிழைதிருத்துதல், பிழைதிருத்த மென்பொருள் உருவாக்கம் போன்ற பணி வாய்ப்புகள் உள்ளன.
- அரசுத்துறை நிறுவனங்கள் மற்றும் நீதிமன்றங்கள், பாடநூல் கழகம் போன்றவற்றில் மொழிபெயர்ப்பாளர் மற்றும் பிழைதிருத்துநர் போன்ற பணிவாய்ப்புகள்.
- விளம்பரவாசகம் எழுதுதல், வர்த்தகப் பொருள் பயன்பாடு குறித்த விவரக்குறிப்பு மொழி பெயர்ப்பு போன்ற பணிவாய்ப்புகளும் தமிழ் கற்றவர்களுக்குக் கிடைக்கும்.
- அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியர்களாகப் பணியாற்றவும் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றவும் வாய்ப்புகள் உள்ளன.



## கற்றது தமிழ்! பெற்றது புகழ்!

- தமிழ் மற்றும் வடமொழி இரண்டிலும் புலமை பெற்ற உ.வே.சா. மற்றும் பண்டிதமணி கதிரேசனார் இருவருக்கும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே 'பெரும் பேராசிரியர்' (மகாமகோ உபாத்யாயா) பட்டம் வழங்கப்பட்டது.
- தமிழறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார், கவிஞர் வைரமுத்து ஆகியோர் இந்திய அரசு வழங்கும் பத்ம பூஷண் விருது பெற்ற தமிழ் மாணவர்கள்.
- சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ் எழுத்தாளர்களில் பலர் தமிழில் முதுகலை / முனைவர் பட்டம் பெற்றவர்கள்.
- பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு UGC அமைப்பு, திரைத்துறையில் சத்யஜித்ரே, இசைத் துறையில் எம். எஸ். சுப்புலட்சுமி ஆகியோருக்கு வழங்கிய தேசியப் பேராசிரியர் (National Professor) என்னும் தகுதியைத் தமிழ்த்துறையில் முனைவர் தமிழண்ணலுக்கு வழங்கியது.
- போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் இந்திரா பார்த்தசாரதி, தி.சு. நடராஜன் போன்றோர் தமிழ்ப் பேராசிரியர்களாகப் பணியாற்றியுள்ளனர்.
- 1984-ல் இ.ஆ.ப தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற முதல் தமிழ் இலக்கிய மாணவர் ஆர். பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. தற்போது (2018) ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலாளர் பதவியில் உள்ளார்.
- பொறியியல் / வேளாண்மைப் பட்டதாரியாக இருந்து இ.ஆ.ப. தேர்வை முழுமையாகத் தமிழில் எழுதி வெற்றி பெற்ற இ.ஆ.ப. அதிகாரிகள் பலர் தற்போது தமிழகத்தில் பணியில் இருக்கிறார்கள்.
- இ.ஆ.ப. தேர்வில் தமிழை விருப்பப் பாடமாக எடுத்து பட்டதாரிகள் பலர் ஆண்டுதோறும் வெற்றிபெறுகின்றனர்.
- திரைத்துறையில் சிறந்த இயக்குநருக்கான தேசிய விருது பெற்ற முதல் தமிழ்த் திரைப்பட இயக்குநரும் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதை ஏழு முறை பெற்ற ஒரே இந்திய திரைப்பட பாடலாசிரியர் என்ற சிறப்பைப் பெற்ற தமிழ்க்கவிஞரும் தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டதாரிகளே.
- தமிழ் மொழியில் சரளமான பேச்சுத் திறனும் நகைச்சுவை உணர்வும் கொண்டவர்கள் தொலைக்காட்சித் தொகுப்பாளர்களாகவும், தொலைக்காட்சி நிகழ்ச்சி நடத்துநர்களாகவும் புகழ் பெற முடியும். அதன் வழியே திரைத்துறையில் நுழைந்து வெற்றி பெற்றவர்கள் பலர் உண்டு.

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 1 | மொழி | உரைநடை | பேச்சுமொழியும் கவிதை மொழியும் | 2 |
| | என்னுயிர் என்பேன் | செய்யுள் | யுகத்தின் பாடல்* | 7 |
| | | | நன்னூல் பாயிரம்* | 9 |
| | | துணைப்பாடம் | ஆறாம் திணை | 12 |
| | | இலக்கணம் | மொழி முதல், இறுதி எழுத்துகள் | 17 |
| 2 | இயற்கை / வேளாண்மை / சுற்றுச்சூழல் | உரைநடை | இயற்கை வேளாண்மை | 28 |
| | மாமழை போற்றுதும் | செய்யுள் | ஏதிலிக்குருவிகள் | 32 |
| | | | திருமலை முருகன் பள்ளு | 33 |
| | | | ஐங்குறுநூறு | 36 |
| | | துணைப்பாடம் | யானை டாக்டர் | 38 |
| | | இலக்கணம் | மெய்ம்மயக்கம் | 44 |
| 3 | பண்பாடு | உரைநடை | மலை இடப்பெயர்கள்: ஓர் ஆய்வு | 52 |
| | பீடு பெற நில் | செய்யுள் | காவடிச்சிந்து | 56 |
| | | | குறுந்தொகை* | 58 |
| | | | புறநானூறு* | 60 |
| | | துணைப்பாடம் | வாடிவாசல் | 62 |
| | | இலக்கணம் | பகுபத உறுப்புகள் | 66 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 77 |
| 4 | அறிவியல் / தொழில்நுட்பம் | உரைநடை | தலைமைச் செயலகம் | 86 |
| | இனியொரு விதி செய்வோம் | செய்யுள் | விஞ்ஞானி | 91 |
| | | | நீலகேசி* | 93 |
| | | | புறநானூறு | 96 |
| | | துணைப்பாடம் | இனிக்கும் இன்சுலின் | 98 |
| | | இலக்கணம் | புணர்ச்சி விதிகள் | 103 |
| 5. | கல்வி | உரைநடை | தமிழகக் கல்வி வரலாறு | 114 |
| | கேடில் விழுச்செல்வம் | செய்யுள் | பிள்ளைக்கூடம் | 119 |
| | | | நற்றிணை | 120 |
| | | | தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் | 122 |
| | | துணைப்பாடம் | இதழாளர் பாரதி | 124 |
| | | இலக்கணம் | படைப்பாக்க உத்திகள் | 128 |
| 6. | நாகரிகம் / தொழில் / வணிகம் | உரைநடை | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு | 140 |
| | நாளெல்லாம் வினைசெய் | செய்யுள் | சீறாப்புராணம் | 145 |
| | | | அகநானூறு | 148 |
| | | துணைப்பாடம் | பிம்பம் | 151 |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | 155 |
| | | வாழ்வியல் | திருக்குறள்* | 167 |

| இயல் | பொருண்மை | | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|---|---|
| 7. | கலை / அழகியல் / புதுமைகள் | உரைநடை | காலத்தை வென்ற கலை | 172 |
| | பல்கலை நிறுவு | செய்யுள் | ஆத்மாநாம் கவிதைகள் | 178 |
| | | | குற்றாலக் குறவஞ்சி | 179 |
| | | | திருச்சாழல் | 181 |
| | | துணைப்பாடம் | இசைத்தமிழர் இருவர் | 183 |
| | | இலக்கணம் | கலைச்சொல்லாக்கம் | 188 |
| 8. | நாடு / சமூகம் / அரசு / நிருவாகம் | உரைநடை | காற்றில் கலந்த பேரோசை | 198 |
| | வையத் தலைமை கொள் | செய்யுள் | புரட்சிக்கவி* | 201 |
| | | | பதிற்றுப்பத்து | 205 |
| | | துணைப்பாடம் | சிந்தனைப் பட்டிமன்றம் | 208 |
| | | இலக்கணம் | ஆக்கப்பெயர்கள் | 213 |
| 9. | அறம் / தத்துவம் / சிந்தனை | உரைநடை | சித்தர் உலகம் | 222 |
| | மெய்ப்பொருள் காண்பது அறிவு | செய்யுள் | ஜப்பானிய ஹைக்கூ | 225 |
| | | | காவியம்* | 226 |
| | | | தொலைந்து போனவர்கள்* | 227 |
| | | | வில்லிபாரதம் | 229 |
| | | துணைப்பாடம் | காஞ்சனை – முன்னுரை | 233 |
| | | இலக்கணம் | நிறுத்தக்குறிகள் | 236 |
| 10. | மனிதம் / ஆளுமை | உரைநடை | தாகூரின் கடிதங்கள் | 246 |
| | யாரையும் மதித்து வாழ் | செய்யுள் | ஒவ்வொரு புல்லையும் | 249 |
| | | | மனோன்மணீயம் | 250 |
| | | துணைப்பாடம் | செவ்வி | 254 |
| | | இலக்கணம் | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் | 258 |
| | | வாழ்வியல் | திருக்குறள் | 267 |


*( * ) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

213Y9B

*மின் நூல்*

21CUAY

*மதிப்பீடு*

B123_11_TAM

*இணைய வளங்கள்*